செ. கு. எண்: 127 நாள் : 05.11.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 5.11.2015

திருநெல்வேலி மாவட்டம், **பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு** நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள தாமிரபரணி ஆற்றின் கீழ் **11** கால்வாய்களின் மூலம் பயன்பெறும் நேரடி மற்றும் மறைமுக பாசனப் பரப்புகளுக்கு பிசான பருவ சாகுபடிக்காக **பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு** நீர்த்தேக்கங்களிலிருந்து **6.11.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள **86,107 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9